டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174

விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆவணி 29 துல்ஹஜ் 14 இதழ்: 212
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 14-9-1981

குதூகல ஆரம்பம்
இன்றுமுதல்
சண்கோ
படப்பிடிப்பாளர்
(கலர் மட்டும்)
SHANKOO Photographers
(Colour only)
உங்களின் கலர் போட்டோக்களுக்குரிய சகல தேவைகளையும் நிவர்த்திசெய்கிறார்கள்.
போஸ்காட் 3 பிரதி — 28-00
35 எம். எம். ஒரு றோல் கழுவமட்டும் 30-00
போஸ்காட் பிரதிபண்ண 7-00
இன்றே நாடுங்கள்
சண்கோ படப்பிடிப்பாளர்
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
0931

★ கொழும்பிலுள்ள ஒரேயொரு

# தமிழ் அகதிகள் முகாம் மூடப்படுமா?

## புதிதாக வருவோருக்கு அனுமதி மறுக்கப்படுகிறது!

(கொழும்பு)

கொழும்பில் இயங்கும் ஒரேயொரு அகதிகள் முகாம் விரைவில் மூடப்படலாம் எனத் தெரியவருகிறது.

கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் இந்த அச்சத்தைத் தோற்றுவித்திருப்பதாக, தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த சிலர் கவலைதெரிவித்துள்ளனர்.

மலையகப் பகுதிகளிலும் மற்றும் தென்னிலங்கையிலும் அண்மையில் நிகழ்ந்த வன்செயல்களைத் தொடர்ந்து நிர்க்கதியான தமிழர்கள் குறிப்பாக இந்திய வம்சாவழி மக்கள் வெள்ளவத்தையில் உள்ள விநாயகர் ஆலயமடத்தில் முகாமிட அனுமதிக்கப்பட்டனர். இந்த முகாமிலுள்ளவர்களுக்கு தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரும் மற்றும் பல பொது ஸ்தாபனங்களும் உதவியளித்து

(6-ம் பக்கம் பார்க்க)

தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.

வவனியா அபிவிருத்தி சபை:

## வெளிநாட்டு ஏற்றுமதியில் கவனம் திரும்புகிறது

(வவனியா)

பாவற்குளம், செட்டிகுளம் பகுதிகளில் காணப்படும் 'மைக்கா' என்னும் மூலப் பொருளைச் சேகரிப்பது என்று வவனியா அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக்குழு முடிவு செய்துள்ளது.

'மைக்கா'வைச் சேகரித்து விற்பனை செய்வதன் மூலம் சபையின் வருமானத்தை அதிகரிக்கலாம் என்றும் மைக்காவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணியையும் சம்பாதிக்க முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

அபிவிருத்திச் சபையின் நடைமுறைக் கருமங்களுக்குத் தடையாக உள்ள நிதிப்பற்றாக் குறையை எவ்விதம் போக்கலாம் என்பது குறித்து நிறைவேற்றுக்குழு விரிவாக ஆராய்ந்தது.

நிறைவேற்றுக்குழுவின் அங்கீகாரம் பெற்ற தீர்மானங்கள் சில வருமாறு;

"2 கோடி 2 லட்ச ரூபா செலவில் ஓமந்தையில் நிறுவப்பட்டுள்ள கல் உடைக்கும்

(6-ம் பக்கம் பார்க்க)

## திருட்டுநகையை விற்று பொழுது போக்கியவர்!

பொலிஸ்விசாரணையில் தகவல்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு மேற்கில் இளைய தம்பி கிருஷ்ணபிள்ளை வீட்டில் களவுபோன 24,650 ரூபா பெறுமதியான நகை, ரொக்கம், உடுபிடவைகள் சம்பந்தமாக கைது செய்யப்பட்டவரிடமிருந்து, பல தகவல்கள் சுன்னாகம் பொலிசாருக்குக் கிடைத்துள்ளன.

(6ம் பக்கம் பார்க்க

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய பொலிஸ்மா அதிபரின் பிரத்தியேக உதவியாளராகக் கடமையாற்றிய ஜனுப் பக்கீர் நுகேகொடைக்கு உதவிப்பொலிஸ் அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(மா)

இலங்கைத்தமிழருக்கு ஆதரவு தெரிவித்து

# தி.மு.க. மறியல்போராட்டம் நாளை நடக்கும்

சென்னை, செப். 13

திராவிட முன்னேற்றக் கழகத்தின்மறியல் போராட்டம், முன்னர் திட்டமிட்டபடி செவ்வாய்க்கிழமை 15ம் திகதிநடைபெறுமென்று இன்று அறிவிக்கப்பட்டது.

இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து இங்குள்ள இலங்கை உதவித் தூதராலயத்தின் முன்னிலையில் 15ம் திகதி நடைபெறவிருக்கும் மறியல் போராட்டத்துக்கு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தலைமை வகிப்பார்.

இதே நேரத்தில், மறியல் போராட்டத்தைக் கைவிடுமாறும்; அண்ணா பிறந்தநாளான 15ம் திகதி மறியல்போராட்டம் நடத்துவது பொருத்தமானதல்ல என்றும்முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

## இராணுவ கவசவாகனம் விபத்துக்குள்ளானது

2 சிப்பாய்கள் காயம்

(யாழ்ப்பாணம்)


இராணுவ கவச வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் இரண்டு இராணுவ சிப்பாய்கள் பலத்த காயத்திற்குள்ளாகி, யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இராணுவ சிப்பாயான எம். விக்கிரமசிங்க (வயது 23) இராணுவ சார்ஜன்ட் கே. ரி. குலரட்ண (வயது 37) இருவருமே விபத்துக்குள்ளானவர்கள் ஆகும். சாரதி காயம் எதுவுமின்றி தப்பிவிட்டதாக அறியப்படுகிறது.

சுன்னாகத்திற்கும் மருதனாமடத்திற்குமிடையில் காங்கேசன்துறை வீதியில் இந்த வாகனம் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

(கு)

த பினன்ஸ் கொம்பனி லிமிட்டெட்
உங்கள் வீட்டுப்பாவனைக்குத் தேவையான பொருட்களைத் தவணை முறையில் வழங்குகிறது!



த பினன்ஸ் கொம்பனி லிமிட்டெட்
249C, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7680

# ‘சைக்கிள் வாலிபர்’களுக்கு நீதிபதி எச்சரிக்கை!

(புலோலி)

“வீதிகளில் பல சைக்கிள்களில் ஒன்றாகச் செல்லும் வாலிபர்களின் பொறுப்பற்ற செயல்களினால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இத்தகைய சைக்கிளோட்டும் வாலிபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்” பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் ஒழுங்கற்ற முறையில் வீதிகளில் சைக்கிளோடும் வாலிபர்களை எச்சரித்தார்.

இளைஞரொருவர் பஸ்ஸினால் மோதப்பட்டு இறந்த வழக்கில் எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளிக்கையிலேயே நீதவான் திரு. மகேசன் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 6-ம் திகதி பருத்தித்துறை இ. போ. ச. சாரதியான சுப்பிரமணியம் கமலநாதம் என்பவர் இ. போ. ச. வண்டியை அதிகவேகமாக கவலையீனமாக ஓட்டி காசிநாதி கேசு செல்வராசா என்பவரை மோதி அவரை மரணமடையச் செய்தாரெனக் குற்றஞ்சாட்டிப் பருத்தித்துறைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இவ் வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டுவந்தது.

எதிரிமீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் எதிரியை விடுதலைசெய்த நீதவான் தனது தீர்ப்பில் பருத்தித்துறைப்பகுதி வாலிபர்கள் நான்கு ஐந்து சைக்கிள்களில் ஒருவரோடு ஒருவர் கைகோர்த்துச் செல்லும் பாணியிலே சைக்கிள்களைப் பக்கவாட்டில் ஓடிச்செல்லு தங்களுக்குப்பின்னால் அல்லது முன்னால் வரும் வாகனங்களுக்கு வழி விலத்திக் கொடுக்காதது சர்வசாதாரணமாகவுள்ளது. இவ்வாறு வாலிபர்கள் நடந்துகொள்வதனால் வீதிப் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுவதுடன், விபத்துக்களும் ஏற்படுகின்றன. இத்தகையோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்” என்று கூறினார்.

“இவ்வழக்கில் சாட்சிகளின்படி எதிரியின்பிழையால் இவ் விபத்து ஏற்படவில்லை என்பது தெளிவாகின்றது. எனவே எதிரியை விடுதலை செய்கிறேன்” என்று நீதிபதி தெரிவித்தார்.

“மன்னார் ஆயர்

# தனிநாயக அடிகள் வழிநின்று தொண்டாற்றுவாரென நம்புகிறோம்”

- யோகேஸ் எம். பி.

(சுண்டுக்குளி)

“சகல மக்களுக்கும் உரிமையான நற்செய்தியையும் பாவ மன்னிப்புப் பிரார்த்தனைகளையும் தமது முழுநேரத் தொண்டாக ஏற்றுக் கொண்டவர்களின் பணிக்குத் தமிழ் மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பு அளிக்கவேண்டும். அவர்கள் நற்பணியினால் சகலரும் சமாதானமும் மன அமைதியும் பெறவேண்டும்”.

சுண்டிக்குளி இறை மக்களின் புனித யுவானியார் ஆலயத்தில் மன்னார் மாவட்ட ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகத்திற்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் கூறினார்.

திரு. யோகேஸ்வரன் எம். பி. தொடர்ந்து பேசுகையில் தனிநாயகம் அடிகளின் வழித்தோன்றலாகிய மன்னார் ஆயரும் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் அரும்பெரும் தொண்டுகள் செய்து தமிழினத்தின் ஒரு விடிவெள்ளியாக விளங்குவார் என எதிர்பார்க்கிறோம். எமக்கு அவரது நீண்டகாலப் பணியைப் பெற்றுக்கொடுப்பதற்காக இறைவன் அவரது இளமைக்காலத்திலேயே ஆயர் ஸ்தானத்தைக் கொடுத்துள்ளார் என்றார்.

மன்னார் ஆயர் பேசுகையில் “நான் ஆயராகிய பொழுது என்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட விருதுவாக்கு “நற்செய்தி” என்பதாகும், தேவதூதனால் எம்மை இரட்சிக்கவந்த யேசுவே நற்செய்தியின் உட்கருத்தாகும். எனவே யேசு என்ன சொன்னார், என்ன செய்தார், என்பதைப்பற்றிப் பின்பற்றி நடப்பதே எமது பாவமன்னிப்பின் பாதையாகும்” எனக் கூறினார்.

எமக்கு நன்மை செய்பவர்களுக்கு நாம் நன்மை செய்தாலும் எமக்கு உதவி செய்பவர்களுக்கு நாம் உதவி செய்தாலும் எமக்கு ஒரு பலனும் இல்லை. எமக்குத் தீமை செய்பவர்களுக்கு நன்மை செய்வதாலேயே நாம் அதன் உண்மையான பலனை அடைய முடியும். உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் நற்செய்திக்கு அர்ப்பணித்து அன்பின் உருவமான முழு யேசு கிறிஸ்துவை இவ்வுலகில் வாழவிடுவதை எமது பணியாக நாம் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஜ)


## வீடு விற்பனைக்கு

வண்ணார்பண்ணையில் 2½ பரப்புக் காணியும், சகல வசதிகளுடன் கூடிய வீடும் (காலியான நிலையில்) விற்பனைக்குண்டு.

ஆ. குபேந்திரராசா,
இல: 7, பி. ஏ. தம்பி லேன்,
வண்ணார்பண்ணை.
போன்: 498

934

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்
சித்தன்கேணியில் நடாத்தும்

## வட்டு. தொண்டேயிம் தொழிற் பயிற்சி நிலையத்தில்

புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன

Electronics, Welding Motor Mechanism, Wiring, Typewriting Shorthand, Spoken English

இயக்குநர்
வட்டு - தொண்டேயிம் தொழிற்பயிற்சி நிலையம்
சித்தன்கேணி
என்னும் முகவரிக்கு உடனே விண்ணப்பிக்கும் 0935


யாழ். மாநகரசபையின்

# அடுத்த கூட்டத்தில் புதுமுகங்களைக் காணலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை கனவான்கள் ஒப்பந்தத்தை மீண்டும் அமுல் படுத்தத் தொடங்கியுள்ளதாகத் தெரிகிறது.

இதனால் மாநகரசபைக்கூட்டம் அடுத்த முறை கூடும் பொழுது புதுமுகங்கள் சிலவற்றைக் காணக்கூடியதாக இருக்கும்.

யாழ். மாநகர சபையின் ஆளும்கட்சியாக இருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் இவ் கனவான்கள் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வருவது குறிப்பிடத்தக்கது.

த. வி. கூட்டணியைச் சேர்ந்த திரு. பி. எவ். சேவியர் ஒப்பந்தப்படி உதவி மேயர் பதவியிலிருந்து ராஜினாமா செய்வதால் உதவி மேயராக திரு. எஸ். அலோசியஸ் நியமிக்கப்படவுள்ளார். இவரும் கடைசி 6 மாதத்துக்கு முன்பு சிறுபான்மைத் தமிழர் ஒருவருக்கு உதவி மேயர் பதவியை ஒப்பந்தப்படி ராஜினாமா செய்துவிட்டுக்கொடுக்க வேண்டும். அதிகமாக திரு. என். ரி. செல்லத்துரைக்கு இவ்வுதவி மேயர் பதவி கிடைக்கலாம்.

உதவி மேயர் பதவியை ராஜினாமா செய்யும் திரு. சேவியர் சட்டப்படி அங்கத்தவர் பதவியிலிருந்தும் விலகல் வேண்டும், விகிதாசார தேர்தலின்படி அங்கத்தவராக ஜனாப் ஷா ஹுல் ஹமீது நியமிக்கப்படவிருக்கிறார். இவர்கள் நாளை மறுதினம் 16ந் திகதி தங்கள் நியமனங்களை ஏற்றுக்கொள்வார்கள்.

இந்நிலையில் யாழ். மாநகர சபையின் எதிர்க் கட்சியாக விளங்கும் காங்கிரஸ் கட்சியிலும் கனவான்கள் ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தப்படவிருப்பதாக தெரியவருகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றம்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மரணசாதனமின்றி மரணமெய்திய காரைநகர் மேற்கு பலுகாட்டைச் சேர்ந்த சந்தையா சபாரத்தினம் என்பவரின் மரணச்சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்

சந்தையா குணரத்தினம்
இல. 37, மில் வீதி,
வவுனியா.
மனுதாரர்

மரணசாதன
நியாயாதிக்கம் இல. ரி 41

எதிர்

1. சந்தையா சபாரத்தினம் மனைவி இராசலட்சுமி பலுகாடு, காரைநகர் தற்போது 54, ஸ்ரீகந்தசுவாமி கோவில் வீதி, வவுனியா
பராய ) 2. சபாரத்தினம்
மடை விஜயலட்சுமி,
யாதர் ) 3. சபாரத்தினம்
விர்கள் தனலட்சுமி,
4. சபாரத்தினம் தனபாலன், மூவரும் பலுகாடு, காரைநகர் தற்போது இல: 54, ஸ்ரீகந்தசுவாமி கோவில் வீதி, வவுனியா. (2, 3, 4-ம் எதிர்வாதிகள் பராயமடையாதவர்களாதலால் தங்கள் வழக்குக் காவலன் 5-ம் எதிர்வாதி மூலம் வெளிப்படுகின்றனர்)
5. தகை ஆய்வு அலுவலர், (புரொபேஷன் ஒவ்விசர்) மாவட்ட நீதிமன்றம், ஊர்காவற்றுறை — எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1-ம் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்ற கட்டளைப்படி
1981ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10-ந் திகதி

கு. அருளானந்தம்,
பதிவாளர்

என்னால் வரைப்பட்டது
த. சோமசுந்தரம்
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி: 0939

யாழ்ப்பாண கல்வித் திணைக்கள
பொழுதுபோக்குக் களரி
சிற்றுண்டிச்சாலை
நடாத்துவதற்கு
கேள்விப் பத்திரங்கள்
கோரல்

மேற்படி கேள்விப் பத்திரங்கள் 1981-09-30-ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கல்வித் திணைக்கள பொழுது போக்குக் களரி, கல்வித் திணைக்களம், செயலாளர் அவர்களிடம் நேரிலோ அல்லது பதிவுத்தபால்மூலமோ சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களையும், விபரங்களையும் ரூபா 2-50 செலுத்தி யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள பொழுது போக்குக் களரியின் பொருளாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
யாழ்ப்பாணம்
கல்வித் திணைக்கள
பொழுது போக்குக் களரி
1981-09-09 091

## கேள்விப் பத்திரம் கோரல்

பனங்காமம் பற்று ப. நோ. கூ. சங்கம், வவுனிக்குளத்துக்குச் சொந்தமான 24/8429 இலக்க லொறிக்கு பழைய உரு அமைப்பு (Re Body Build) செய்யமிடும் பொருட்டு 28-9-81ம் திகதிக்கு முன் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களை ரூபா 200/- மீளளிக்கப்படும். வைப்புப் பணமாகவும், ரூபா 50/- மீளளிக்கப்படாத வைப்புப்பணமாகவும் செலுத்தி நேரடியாகவோ, தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை தலைவர், பனங்காமம்பற்று ப. நோ. கூ. சங்கம், வவுனிக்குளம், என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரம் அனுப்பும் தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் ‘லொறி உரு அமைப்பதற்கான கேள்விப் பத்திரம்’ என எழுதப்படல் வேண்டும். லொறியைப் பார்வையிட விரும்புபவர்கள் வேலை நாட்களில் காலை 8-00 மணிமுதல் பி. ப. 5-00 மணிவரையும் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்,
பனங்காமம் பற்று
ப. நோ. கூ. சங்கம்.
வவுனிக்குளம்.
0892

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

உத்தரவுபெற்ற வியாபாரம் உள்ள கடை, தளபாடங்கள், சிறிய வீடு, கிணறு ஆகியவற்றுடன் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: ச. இராசரெத்தினம் மான்பாடசாலை வீதி, டச்ரோட், உடுவில் 0920

அரியாலையில் 240 பரப்பு நல்ல தென்னங்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: கல்விபுரம் [சட்டத்தரணி], ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0928

யாழ் பலாலி வீதியில் வளாகச் சந்திக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் சுற்றுமதில், புதிய கிணற்றுடன் இரண்டரைப் பரப்பு வெறுங்காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: பொ. தர்மபாலன் சீமாஸ் ரெக்ஸ்வரல்ஸ், நவீன சந்தை யாழ்ப்பாணம். தொலைபேசி: 7423 0889

வீடு கிணற்றுடன் சேர்ந்த 2½ பரப்புக் காணி கட்டிலேன் கோண்டாவில் மேற்கில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சு. சுந்தரம், தாவடிச் சந்தி. 0932

## பயிற்சி

வெல்டிங், மோட்டர் மெக்கானிசம், வயரிங் வகுப்புகள் (செய்முறையுடன்) ஆரம்பம்: C. E. T. யாழ்ப்பாணம் கல்வி நிலையம், [சாந்தி சினிமாவிற்கு முன்] 22, ராமையா செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். 0929

விசேட ஒரு மாத எலக்ரிக்கல் பயிற்சி 30 - 09 - 81 ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology, 9, Stanley Road, Jaffna. 0910

## தேவை

உடைகளை பிசலுடன் சரிபார்த்துக் கொடுப்பதற்கு இருவர் தேவை. 19-9-81வரை நேரிலோ கடிதமூலமோ தொடர்பு கொள்க: இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வயது 18 - 25 வரை சன்லைட் றைக்கிளினேஸ், யாழ்ப்பாணம். 6930

நல்ல நிலையிலுள்ள மகிபேதுசன் ரீக்லர் கலப்பையுடன் விற்பனைக்குண்டு. (ஸைக்கர் கராச்) எம். எவ் டிராக்டர் என்ஜினியரிங், 70, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 0937

மணமகள் தேவை! மலேஷியாவில் உத்தியோகம் பார்க்கும் புலோலியைச் சேர்ந்த 28 வயதுடைய இந்து இளைஞனுக்குத் தகுந்த மணமகள் தேவை Mrs Ratnavel, V.M. Road, PointPedro. 0936

## சங்குகொள்வனவு

(மன்னார்)

எருக்கலம்பிட்டி உள்ளாற்றுக் கடலில் தொடர்ந்து மீனவர்களுக்கு வலம்புரிச் சங்குகள் கிடைத்துவருகின்றன.

உள்ளாற்றுக்கடல்தற்போது வற்றுக் காலமாதலால் இன்னும் ஏராளமான சாதாரண சங்குகளும் கிடைத்து வருகின்றன சாதாரண சங்குகளை ஒன்று ஒரு ரூபா வீதம் தனிப்பட்டவர்கள் கொள்முதல்செய்து வருகின்றனர். (ஜ)

### மணிவாக்கு

உன்னை யாவரும் வியக்கக்கருதி நீயே உன்னைப் புகழ்தல், விளக்கைப் பிரகாசிப்பிக்கக்கருதி அதனது தகழியில் நீரை வார்த்தல் போலும்.

—ஆறுமுகநாவலர்

# நமது நோக்கு

## மயிரற்ற முட்டை

ஆதியில் கோழிமுட்டைக்கு மயிரிருந்ததாகவும் அக்காலத்திலேயிருந்து வந்தவர்கள் முட்டையில் மயிர் பிடுங்கும் திறமையுடையவர்களாகவிருந்ததால், அதனை முற்றாகவே பிடுங்கிவிட கோழியின் கருவிலேயே தாக்கம் ஏற்பட்டதாக ஒரு நாடோடிக் கதை உண்டு.

இன்று நாம் காணும் கோழிமுட்டை மயிரற்றதாகவிருப்பதின் காரணத்தை, இன்றும் 'முட்டையில் மயிர் பிடுங்கு'ம் வீரர்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.

மயிரற்ற முட்டையில் மயிர் பிடுங்கும் மாவீரம் எங்களுக்கு எவ்வித நன்மை பயக்கும்?

இந்த தீரச்செயலில் ஈடுபடுவோரின் பட்டியல் பிரமாண்டமானது. இருந்தும் நாம் தமிழகத்தில் நடந்தேறிய, நடக்கவிருக்கும் 'பூரண ஹர்த்தால்' என்னும் விடயத்தை எடுத்துக்கொண்டால் அதன் பாத்திரங்கள் பிரதமர் இந்திரா காந்தி தொடக்கம் இலங்கை அமைச்சர் தொண்டமான் வரைக்கும் தமிழக முதலமைச்சர் எம். ஜி ராமச்சந்திரன், முன்னைநாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி உட்பட இந்தப் 'பயனில்' நாடகத்தில் பங்குபற்றுகின்றனர். எமக்குப் பயனில், ஆனால் அவர்களுக்குப் பயனுள்ளதாகவிருக்கும்.

பிரெஞ்சு மக்களும் தமிழ் மக்களும் ஒரு பண்பில் ஒற்றுமைப்பட்டவர்கள். பிரெஞ்சு மக்கள் தமிழ் மக்களைப் போல ஒருவரை ஒருவர் வேகமாகக் கண்டிப்பர்; ஆனால் தங்கள் மொழியையும், நாட்டையும் நேசிப்பதிலும் பின்னிற்கமாட்டார்கள் என்று சொல்லப்படுகிறது.

திருமதி இந்திரா காந்தியைத் தவிர, மற்றைய பாத்திரங்களைப் பார்த்தால் இந்தக் கூற்றின் உண்மை புலப்படுகிறது.

தமிழுக்காகவே, இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஏற்படும் அநீதிகளை எதிர்த்தும், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தும், தமிழக மாநில அரசு ஒரு ஹர்த்தாலை திறம்பட நடத்தி முடித்துவிட்டதாகச் செய்தி.

இதற்கெழும்பிய விமர்சனங்கள், முரண்பாட்டுக் கருத்துக்கள் தமிழ் மக்கள் பிறப்பிலேயே கொண்டிருப்பதான மேற்கூறப்பட்ட பண்பைக் குறிக்கின்றதெனலாம்.

ஹர்த்தால் அவசியமா? நிதிஉதவியும் மக்கள் ஆதரவுமல்லவா முக்கியம்! இலங்கை அரசு நிதிஉதவ முடியாவிட்டால் அமைச்சர் தொண்டமான் ஏன் அப்படிச்சொல்லவில்லை? தமிழக மக்களிடம் நிதி உதவி கோருவது அழகல்ல; அது இலங்கையிலே திரட்டப்படவேண்டியது, மாநில அரசின் ஹர்த்தால் ஒரு கண்துடைப்பு! மக்கள் ஹர்த்தால் ஒன்றைத் தமிழகம் நடத்தி முடிக்கும்! என்ன! நீங்கள் அங்கு நடந்த குழப்பங்களை மிகைப்படுத்திப்பேசி, எழுதிவிட்டீர்கள்! அதனை இலங்கை அரசு செப்பனிடும்; தேவைப்படுவது நிதி உதவியே! தலையிட உரிமையில்லையே!

இது உள்ளூர் விடயம் தான். ஆனால் அயலவர் வீட்டில் ஆபத்தான காரியம் நடந்தால் எட்டி அதனை விசாரிப்பதில்லையா? இவைபோன்ற பல வாய் வீரங்கள்.

நாம் குறிப்பிட்ட திறமைக்குத் தகுந்த உதாரணம் திருமதி இந்திராவின் கூற்றுகப் பத்திரிகைகள் குறிப்பிட்டிருந்தது! 'அந்நாட்டு மக்களுக்கு தமிழகத்தில் கவலைப்படுவது விந்தையாகவுள்ளது.'

இது ராஜதந்திரமா? அல்லது ஏளனமா? மகாத்மா காந்தி சுடப்பட்டபோது இங்கு மக்கள் கவலைப்பட்டது விந்தையா?

# மகாதேவா தாம்போதி திட்டம் வெற்றி பெற....

மகாதேவா தாம்போதி அமைக்கப்படவேண்டியதன் அவசியம் எமது நாடு சுதந்திரம் அடையும்முன்னே உணரப்பட்டது. இத் தாம்போதி கட்டுவதற்கும், இடைவெளியை நிரப்புவதற்கும் காலத்திற்குக் காலம் பல்வேறு தரப்பினராலும் முயற்சிகள் பல மேற்கொண்டபோதிலும் இன்னமும் முற்றுமுழுதாக நிறைவேற முடியாத நிலை இருந்துவருவது துரதிர்ஷ்டவசமானதே.

யாழ். குடாநாட்டு மக்களது பல பிரச்னைகளுக்கும் நிரந்தர தீர்வு காணவல்ல இவ்வபிவிருத்தித்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு இன்று சகல

### மக்கள் கருத்து

தரப்பினரும் ஒருமுகமாக முயற்சிசெய்துவருவதால் இத்திட்டம் பூர்த்தியடைய இடமுண்டு என்ற நம்பிக்கையொளி பிறந்துள்ளது. எமது மாவட்ட அமைச்சும், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், அபிவிருத்திசபையும் இத்திட்டம் நிறைவேறப் பாடுபடுவதாக அறிவித்துள்ளமையும் அதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுத்துள்ளமையும நம்பிக்கையை மேலும் வலுவூட்டுகின்றது, குறிப்பாக பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் 11லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளமையும், வேலைகள் ஆரம்பிப்பதற்குவேண்டிய கற்கள், பறிக்கப்பட்டு வருவதும் மக்களுக்கு மேலும் நம்பிக்கையூட்டுகின்றது. இதே நேரத்தில் பிரதேசஅபிவிருத்தி அமைச்சும் பாலவேலைகளுக்காக நிதிஒதுக்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளமை மகிழ்ச்சியூட்டுமொன்றாகும். இத் திட்டம் பூர்த்தியடைந்தால் எமது மாவட்ட மக்கள் அடையும் நன்மைகள் சகலரும் அறிந்ததே.

அரசும் பாராளுமன்ற உறுப்பினர்களும், அபிவிருத்திசபையினரும், ஊழியர்களும், இதில் அக்கறையுடன் உழைத்துவருகின்றவேளையில் எமது பகுதி மக்களும் இதில் பங்குகொண்டு விரைவுபடுத்த சந்தர்ப்பங்கள் பல உண்டு என்பதனையும் குறிப்பிடாது இருக்கமுடியாது. எமது மாவட்டத்தில் பல அபிவிருத்திப் பணிகளைச் சிரமதான மூலமும் மக்கள் பங்களிப்பின் மூலமும் நிறைவேற்றியுள்ளமை நாம் அறிந்ததே. எமது மூதாதையர் எமது பகுதி நீர்பாசனக்குளங்களை புனரமைத்து நீரைத் தேக்குவதற்கு சிரமதானமுறையில் மனித உழைப்பை நல்கி அபிவிருத்தி முயற்சியில் ஈடுபட்டுள்ளமை எமது வரலாறு காட்டும் உண்மையாகும். பல மைல்கள் தெருக்களைக்கூட அமைத்துள்ளனர். இன்னும் கிராமக்குளங்களையும், தெருக்களையும் சிரமதானமுறையில் அமைத்துவருகின்ற பண்பு இன்றும் இருந்துவருகிறது. இந்தநிலையில் அரசாங்கத்தினதும் அரசியல் பிரமுகர்களதும் முயற்சியில் பொதுமக்களும் பங்குகொண்டு உழைத்தால் இம்முயற்சி இலகுவாக்கப்படும் என்பதனை மறப்பதற்கில்லை.

பெறுகின்றார். இதனை பரந்தன் வழியாக ஏற்றிச்செல்கின்றவேளைக்குலொறிகள் தேவைப்படுகின்றன. இடைவெளியை நிரப்புவதற்கு அண்ணளவாக 3000 லொறி லோட்டுகள் தேவைப்படுகின்றன. இதனை நிறைவேற்ற திணைக்களத்தின் இரு லொறிகள் போதியதாக இல்லை.

இப்பணியில் சிரமமான அடிப்படையில் தனியார்துறை லொறிகளையும், ப. நோ. கூ. சங்க லொறிகளையும் ஈடுபடுத்த திட்டம் தீட்டப்பட்டு இதில்

### திருமதி கமலாதேவி இராசநாயகம்

இத்திட்டத்தில் பொதுமக்கள் எவ்வாறு பங்குபற்றமுடியும் என்ற கேள்வியும் எழுப்பப்படலாம். இதுபற்றி பல மகாநாடுகளில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்களாலும், உயர்அதிகாரிகளாலும் விளக்கப்பட்டுள்ளது. யாழ்மாவட்ட அரசாங்கஅதிபர் தலைமையில் சிரமதான திட்டத்திற்கான குழுவும் இயங்கிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்திற்கான பால வேலைகளைப் பொறுத்தவரை தொழில்நுட்ப வேலையாகும் இடைவெளியை நிரப்புவதற்கும் பாலவேலைக்கும் அதிகம் தேவைப்படுவது கற்களாகும். இக் கற்கள் அமைவிடத்தில் உடைத்துஎடுக்கும் பெறுமதியிலும் பன்மடங்கு நிதி போக்குவரத்திற்கே தேவைப்படுகிறது. இதற்குத் தேவையானமூலப்பொருளான கற்களை இவ்வேலைக்குப் பொறுப்பான பூநகரி பெருந்தெருக்கள் நிறைவேற்றுப் பொறியியலாளர் சாவகச்சேரியிலுள்ள வேம்பிராய், கைதடி. முழங்காவில் ஆகிய கல்லுடைக்கும் தளங்களிலிருந்து பூநகரி ப. நோ. கூ. சங்கம், யாழ்ப்பாண ப. நோ. கூ. சங்கம், மிக்க வைற் அதிபர் உட்பட சில தனியாரும் சேர்ந்து உழைத்தனர். ஆனால் இதில் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை. இது கவலைக்குரியதானாலும், இத்திட்டம் சாத்தியமற்றது என்று கூறிவிட முடியாது. எமது மாவட்டத்திலே ஏறக்குறைய 5000 லொறிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. எமக்கு தற்போதைக்கு 2500 தொடக்கம் 3000 லொறி லோட்டுகளே தேவைப்படுகின்றன. இந்த லொறிச் சொந்தக்காரர்களில் 2500 பேர் சிந்தித்து ஒரு லோட் கல்லை ஏற்றிக் கொடுத்தாலே ஒரே நாளில் இதனை முடித்துவிட முடியும். இந்த நல்ல பணியை சிந்திக்கத் தவறுவது லொறிச் சொந்தக்காரர்களுக்கு மட்டுமல்ல யாழ் மாவட்ட மக்களுக்குமே பேரிழப்பாகும். தேவையான கல்லையும் ஏற்றி இறக்கு செலவையும் திணைக்களம் செய்து முடிக்குமென சிரமதானக்குழு மகாநாட்டில் முடிவெடுக்கப்பட்டு சகல உதவி அரசாங்க

[6-ம் பக்கம் பார்க்க

# தென் மேற்காபிரிக்க தேசியம்

இருபத்தோராவது நூற்றாண்டை அணுகிநிற்கும் உலகில் கறுப்பராட்சியை அவர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளில் தடைசெய்ய முயல்வது தற்கொலைக்குச் சமானமானது.

இங்கிலாந்தின் கான்செவேட்டிவ் பிரதமர் 'இரும்புப்' பெண் திருமதி மாகரட் தாட்சரே இந்த உண்மையை உணர்ந்ததால் தென் றொடிஷியாவில் சிறுபான்மை வெள்ளையரின் ஆதிக்கத்துக்கு முற்றுப் புள்ளிவைத்து நாட்டுக்கு ஒரு சுதந்திர ஆட்சிஅமைக்க உதவினார்.

கையாட்கள் கொண்டு நாடுகளைப் பரிபாலித்தல ஜனதிபதி றீகனின் உலக ஆதிக்கத்திட்டங்களுக்கு ஓரளவிற்கு உதவியாகவிருக்கும், ஆயினும் நிரந்தரமான அமைதி வாழ்விற்கு பரிகாரமாகாது.

மேற்காசியாவில் அமெரிக்கச் செல்வாக்கு முழுமையாக இஸ்ரேல் பிரதமர் பெகினில் தங்கியிருக்கிறது. இவர் ஜனதிபதி றீகனின் பிரதிநிதியென்றால், பாலஸ்தீனியருக்கு எதிராக தென் லெபனனில் பிரதமர் பெகின் தம்முடைய கையாளர் ஒருவரை - மேஜர் ஹாடட் - அதிகாரத்தில் அமர்த்தியிருக்கிறார்; பாலஸ்தீனியர் தம் தாய் நாட்டை மீட்பதெங்ஙனம்?

இதேபோன்று தென் ஆபிரிக்காவில் ஜனதிபதி றீகன் கட்டளையைத் தலைமேற்கொண்டவர் திரு. போதா, அவருடைய திருவிளையாடலுக்கு அவர் நம்பிக்கைவைத்திருப்பது அவருடைய கையாளாகிய திரு. ஜோனஸ் சாவிம்பி என்ற அங்கோலா மக்களின் 'துரோகியாவார்.' இவருடைய உதவிகொண்டு தென் ஆபிரிக்க தேசிய இக்கத்தைத் தடைசெய்யலாமெனத் திட்டமிட்டுச் செயலாற்றுகின்றார் திரு. போதா.

எனவே இவ்விரு அரங்குகளிலும் - மேற்கு ஆசியா- தென் ஆபிரிக்கா-கையாட்களின் கையாட்கள் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியம் நிலைநிற்குமென்பது பகற்கனவு.

இருந்தும் இக்கனவை நனவாக்க, தெரிந்தோ தெரியாமலோ நான்கு பெருநாடுகள் உடந்தையாக விருப்பது விந்தையே! கனடா, பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி ஆகிய நால்வரும் ஜனதிபதி றீகனின் ஆலோசனைக்கேற்ப நமியா நாட்டின் சுதந்திரம் நிர்ணயிக்கப்படாவிட்டால் தென் ஆபிரிக்காவில் தங்கள் தங்கள் பொருளாதார, அரசியல் நலங்கள் வலுவாகப் பாதிக்கப்படுமென்பதை உணரவேண்டும்.

### இன்று சந்நிதி முருகன் தீர்த்தம்

## உன்றன் சந்நிதி இன்றேல் நிம்மதி ஏது?

பல்லவி

சந்நிதி ஆண்டவனே—உந்தன்
சந்நிதி இன்றேல்நிம்மதி உண்டோசொல் [சந்]

அனுபல்லவி

அன்னையும் தந்தையும் ஆகி நீயின்றாய்
அன்பொழுகத் தமிழ் தந்து வளர்த்தாய் [சந்]

சரணம்

பண்ணிய பாவங்கள் பார்த்து சலித்தும் நீ
எண்ணியதையீந்து என்பசி தீர்க்கின்றாய்
கண்ணின் இமைகள்போல் காத்தும் இயக்கின்றாய்
உன்னிலும் இனியவன் உலகினில் உண்டோசொல் [சந்]

உன்னொளி வேல்களாய் உறைந்து ஒளிருதே
ஒவ்வொன்றும் உண்மையின் அழகினை விளக்குதே
என்னென்ன வேண்டுமென்று என்னையும் கேட்குதே
கண்கண்டு களைக்கின்ற காட்சியைச் சுவைக்கின்றேன்
[சந்]

குன்று நதிதோறும் நின்ற நின் குணமே
தொண்டமானாற்றை நீ கொண்ட காரணமே
கண்டாமணியிலெழும் கான ப்ரணவமே
தண்டாயுதபாணி தெய்வமே செல்வமே [சந்]

தந்தைக்கு உபதேசம் செய்த சாமிநாதா
தந்ததை மறவாதுன் சிந்தனையைத் தாதா
தொந்திக் கணபதியின் சோதரனே சீலா
தொண்டற்குந் தொண்டாற்றும் சுந்தரவடிவேலா [சந்]

வண்ணமுகம் ஆறில் வடியும் புன்னகையினால்
மண்ணில் மகவாய் ஒவ்வோர் மனையிலும் தவழுகிறாய்
பன்னிரு விழிகளிலும் படரும்உன் கருணையினால்
என்னிதயத் திருந்தும் எழுகிறாய் கவிதையாய் [சந்]

—பொ. வேலும்மயிலும்

## துன்னாலை இராசகோபால் கொலைவழக்கு:

# “என்மகளில் உன் தம்பிக்கு ஆசையாம் நான் அவரைத் திருத்தி வைக்கிறேன்”

## 1ம் எதிரி இப்படிச் சொன்னதாக இறந்தவரின் சகோதரி சாட்சியம்

(நமது புலோலி நிருபர்)

சம்பவதினம் வீட்டிற்கு வந்த 1ம் எதிரி எனது மகளில் உனது தம்பி இராசகோபால் ஆசையாக இருக்கிறாராம் என்றும் இராசகோபாலைத் தான் திருத்திவைப்பதாகவும் கூறிவிட்டுச் சென்றார். மறுநாள் எனது தம்பி இராசகோபால் இலைக்கயிற்றில் சுருக்கிடப்பட்டு தன்னைப்பாடசாலையில் தொங்கி இறந்திருந்தார்.”

இவ்வாறு துன்னாலை இராசகோபால் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கொலையுண்டவரின் சகோதரியான விஜயரத்தினம் பாக்கியம் (வயது 40) குறிப்பிட்டார்.

இக்கொலை வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. தொடர்ந்து சாட்சியமளித்த பாக்கியம் சொன்னதாவது:

“கடந்த வைகாசி மாதம் 18ம் திகதி எனக்கு ஞாபகமிருக்கின்றது. அன்று வந்ருப் பளைப்பொங்கல் நாள். இறந்த எனது சகோதரன் கூலிவேலை செய்பவர். அவர் வழக்கின் 1ம் எதிரியான சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவரின் மகள் ரேணுகாதேவியின் வீட்டிலும் கூலிவேலை செய்வதுண்டு. இறந்த எனது சகோதரனுக்கும் எனக்கும் ரேணுகாதேவி ஒன்றுவிட்ட சகோதரி. 1ம் எதிரி சுப்பிரமணியம் சிறிய தகப்பனார். 2ம் எதிரி ஊரில் உள்ள சலவைத் தொழிலாளி. 3ம் எதிரி ரேணுகாதேவின் கணவன்.

“1ம் எதிரியின் வீடு எங்கள் வீட்டிலிருந்து சுமார் 200 யார் தூரத்திலுள்ளது. ரேணுகாதேவியும் அதே வீட்டில்தான் தாயுடன் வசித்து வருகின்றார். சம்பவதினமான வைகாசி 18ம் திகதி பகல் 1 மணியளவில் 1ம் எதிரி சுப்பிரமணியம் கொட்டன் ஒன்றுடன் வந்து இராசகோபால் இருக்கிறாரா என்று கேட்டார்.

நான் என்ன விசேஷம் என்று கேட்டேன். எனது மகளில் உனது தம்பி இராசகோபால் ஆசையாக இருக்கிறாராம் என்று கூறினார். இராசகோபால் இங்கே இல்லை என்று நான் சொன்னேன். வல்லிபுரநாதர்பக்கம் போயிருப்பாரா என்று கேட்க நான் தெரியாதென்று சொன்னேன்.

“1ம் எதிரி திரும்பிப்போகும்போது இராசகோபாலைத் திருத்தி வைக்கின்றேன் என்று சொல்லிவிட்டுச்சென்றார். பின்பு பி. ப. 3 மணிபோல் இராசகோபால் வீட்டிற்கு வந்தார். நான் எனது மகன் பரமேஸ்வரனிடம் சுப்பிரமணியம் கொட்டனுடன் வந்து தேடிக்கொண்டு போகிறார் என்று மாமாவிடம் சொல்லு என்று சொன்னேன். மகன் பரமேஸ்வரன் இராசகோபாலிடம் நான் சொன்ன வசனைச் சொன்னது எனக்குக் கேட்டது. பின்பு மூன்றரை மணிபோல் நான் குளிக்கச் சென்று வந்து கோவிலுக்குச்சென்றுவிட்டேன். பின்பு 6 மணிபோல் நான் கோவிலால் வந்தபோது 4 மணிபோல் சுப்பிரமணியம் வந்து இராசகோபாலைத் தேடியதாகவும் இராசகோபால் 5 மணிபோல் வந்து அம்மா கமலம்மாவிடம் புக்கை வாங்கிச் சாப்பிட்டுச் சென்றதாகவும் மகன் பரமேஸ்வரன் மூலமாக அறிந்தேன். பின்பு அன்று இராசகோபால் வீட்டிற்கு வரவில்லை. மறுநாள் காலை 6 மணியளவில் உதயகுமார் என்பவர் வந்து இராசகோபால் துன்னாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கழுத்தில் சுருக்கிட்டு தொங்கிக்கொண்டிருப்பதாகச் சொன்னார். நான் உடனே அங்கு ஓடிச்சென்றேன். அங்கு ஒருவரும் இருக்கவில்லை. நான் குளறியதும் சனங்கள் வந்து கூடினார்கள். தங்கவடிவேல் என்பவரைப் பொலிசிற்குத் தகவல் கொடுக்குமாறு அனுப்பினேன்.

“நான் அங்கு சென்றபோது தம்பி இராசகோபால் இலைக்கயிற்றில் சுருக்கிடப்பட்டு முழங்கால்கள் மடிந்தபடி காலடிகள் இரண்டும் நிலத்தில் முட்டியபடி தொங்கிக் கொண்டிருந்தார். நிலத்தில் காலுக்குப் பக்கத்தில் இரத்தம் காணப்பட்டது.

“2ம் எதிரி சின்னத்தம்பியின் வீடு இராசகோபால் தொங்கிக் கொண்டிருந்த பாடசாலையிலிருந்து சுமார் 150 யார் தூரத்தில் இருக்கிறது. 1ம் எதிரியின் வீடு சுமார் 300 யார் தூரத்தில் இருக்கிறது. 2ம் எதிரி கூலித் தொழிலுக்கும் செல்பவர். ரேணுகாதேவியின் வீடு கட்டப்பட்டபோது இறந்த இராசகோபாலும் 2ம் எதிரி சின்னத்தம்பியும் அங்கு கூலியாட்களாக வேலை செய்தார்கள்.

“தம்பி இராசகோபால் தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு குளறியபோது அங்கு கூடிய ஆட்களில் 2ம், 3ம் எதிரிகளும் காணப்பட்டனர். அன்று காலை ஆறேகால் மணி தொடக்கம் பி. ப. 3 மணிவரையும் நான் நின்றபோது 1ம் எதிரியைக் காணவில்லை.

1ம், 3ம் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். தம்பிரத்தினம் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (வ)

# பாகிஸ்தான் - சோவியத் பொருளாதார ஒத்துழைப்பு

கராச்சி, செப். 13

பாகிஸ்தானின் தலைநகரான கராச்சிக்கருகில் உள்ள உருக்காலையின் முதலாவது கட்ட ஆரம்ப வைபவம், கடந்த வாரம் இங்கு கோலாகலமாக நடைபெற்றது. சோவியத் பொருளாதார, தொழில்நுட்ப உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட இந்த உருக்காலை, வருடாந்தம் 10 லட்சம் தொன் உருக்கை உற்பத்திசெய்யும். இந்த உருக்காலையின் வருடாந்த உற்பத்தி 20 லட்சம் தொன்களாக அதிகரிக்கும் வகை கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இத் தொழிலகத்தில் பணியாற்றவென 300பேர் பயிற்றுவிக்கப் பட்டுள்ளனர். 1000க்கு மதிகமானவர்கள் சோவியத் தொழிலகங்களில் பயிற்சி பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கள் 64 ஆசிய, ஆபிரிக்க லத்தீனமரிக்க நாடுகளுடன் சோவியத் யூனியன் மேற்கொண்டுள்ளது.

# பாக். பத்திரிகை செய்தி: இந்தியா மறுப்பு

புதுடில்லி, செப். 12

“பாகிஸ்தானிய பத்திரிகைகள் இந்தியாவைப்பற்றி வெளியிட்ட தகவல்கள் ஆதாரமற்றவை. இத்தகவல்கள் விசனத்தக்குரியது” என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் லோக சபையில் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இஸ்ரேலிய பாணியில் இந்தியா ஆகாயத் தாக்குதலை பாகிஸ்தானிய அணு ஆயுதத் தளங்கள் மீது திடீரென மேற்கொண்டு அழிக்க உள்ளதாக பாகிஸ்தானியபத்திரிகைகளின் செய்தி வெளியிட்டிருந்தன. (கு)

# அமெரிக்க ஜனாதிபதிக்கு கூடுதல் பாதுகாப்பு

நியூயார்க், செப். 13

“ஜனாதிபதி றேகனைகொலை செய்யமேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து, ஜனாதிபதியை பாதுகாக்க ரகசிய சேவை முழுமையாக செயல்பட வேண்டும். இதனைச் சரிவரச் செய்வதற்கு பாதுகாப்பு மட்டுமின்றி கொலைசெய்யக்கூடிய ஆபத்தான நபர்கள் பற்றிய தகவலை சேகரித்தல், அவர்களைக் கண்காணித்தல் முதலான வேலைகளும் அவசியம்.”

அமெரிக்க நீதி இலாகா தயாரித்துள்ள அறிக்கையொன்று இந்த ஆலோசனையை முன்வைத்துள்ளது என்று “அசோஷியேட்டட் பிரஸ்”, தெரிவித்துள்ளது.

பந்தோபஸ்து காரணத்தைக் காட்டி ஆயிரக்கணக்கான நபர்களை பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் பல்லாண்டுகளாக கண்காணித்து வந்துள்ளன என்றும் 1975ம் ஆண்டு காங்கிரஸ்சபையில் “எப்.பி.ஐ” மாத்திரம் பல்வேறுபொதுஜன இயக்கங்கள். நபர்கள் பற்றி 500,000 பைல்களை வைத்திருந்ததாகவும் 1953-1973க்கு இடைப்பட்ட 20 ஆண்டுகளில் சி. ஐ. ஏ. மாத்திரம் 250,000 கடிதங்களை சட்டத்துக்கு மாறாக திறந்து படம் எடுத்தது என்றும் இதேபோல ராணுவ உளவு சேவை 100,000 நபர்கள் பற்றி பைல் வைத்திருந்தது என்றும் சட்டத்தை மீறி தொலைபேசிசம்பாஷணைகளை அரசாங்க ஏஜண்டுகள் பதிவுசெய்தனர் என்றும் அறியப்படுகிறது.

# பஸ் ஊழியர்களுக்கு பண்ணிசை வகுப்புகள்

(சுண்டிக்குளி)

வடபிராந்திய போக்குவரத்துசபை ஊழியர்களுக்கான தேவார பண்ணிசை பயிற்சி வகுப்பொன்றை சபையின் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் ஒழுங்குசெய்துள்ளார்.

வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறவிருக்கும் இப் பயிற்சி வகுப்பில் நேரவசதியுள்ள சகல ஊழியர்களையும் கலந்துகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

கொண்டாவில் சாலையில் நடைபெறவிருக்கும் இப் பயிற்சிவகுப்பை திருமதி. பராசக்தி சிவநாதன் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## கீரிமலையில் நூல் அறிமுகவிழா


(சுழிபுரம்)

தொல்புரம் புலவர் நா. சிவபாதசுந்தரனார் எழுதிய “பரவெளித் தத்துவம்” நூல் அறிமுகவிழா கீரிமலை சிவநெறிக் கழகத்தினரால் வரும் 19ம் திகதி சனிக்கிழமை கீரிமலை நகுலேஸ்வரர் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது. இலக்கணவித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் திரு. வே. தியாகராசா, வித்துவான் இ. ஆறுமுகம், திரு. தி. வேலாயுதம், திரு. த. சண்முகசுந்தரம் ஆகியோர் உரையாற்றுவர். (அ)

## தோட்டத்தில் கைகலப்பு

(பதுளை)


கிராமவாசிகளுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு மிடையில் இடம்பெற்ற கைகலப்பைத் தொடர்ந்து பொலிசாரும் இராணுவத்தினரும் விரைந்துள்ளனர். (கு)

மீண்டும் வந்துள்ளது

Pilot
BALL POINT

பைலட்
மத்தியதர
போல் பாயின்ட்



சிறப்பான எழுத்திற்கு
உகந்த பைலட்
எங்கும் பெற்றுக்கொள்ளலாம்

ரூ. 1/75

SRI COMMUNICATIONS

விற்பனையாளர்: ஷோ வொலஸ் அன்ட் ஹெஜஸ் கொழும்பு 3. டெலிபோன்:- 20671 - 9

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 2-30, 6-30
CONVOY

நாகம்ஸ் (கல்முனை)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி பைரவன்

கடைசி வாரம்
ராஜா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு-சுஜாதா
நூல் வேலி
(கலர்)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சி
சிவகுமார் - லட்சுமி
அவன்- அவள் அது (ஈஸ்ட்மன்கலர்)

ரியோ (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும் அற்புதவிளக்கும்

சாந்தி (யாழ் நகர்) 10-30, 2-30, 6-15 & 9-45
ஜெமினி-சாவித்திரி-தங்கவேலு-பாலையா
14—15 இருதினங்கள் மட்டும்
கடன்வாங்கி கல்யாணம்
— புதிய பிரதி —
18-9-81—கமலஹாசன்...... "குரு"—

கடைசி வாரம்
(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
★ எம். ஜி. ஆர். ★ லதா
பல்லாண்டு வாழ்க
(ரங்கீன் கலர்)

ஈழத்து எம். ஜி. ஆர். காமினியின் அற்புத நடிப்பைக் காண இன்னும் சில தினங்கள் மட்டும்.
வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
★ காமினி ★ ஸ்ரீபிரியா ★ ராதாசலூஜா
நீலக்கடலின் ஓரத்திலே
(ரங்கீன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ஜெமினி - முத்துராமன் - எம். ஆர். ராதா
கே. ஆர். விஜயா - சாவித்திரி - மனோரமா
நடித்த
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி
கற்பகம்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
★ சுதாகர் ★ பாக்கியராஜ் ★ சுமதி
மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

4-வது வாரம்
ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
(யாழ் நகர்)
மஞ்சுபார்கவி — சோமயாஜுலு
சங்கராபரணம் (கலர்)

20-th Last Day
REGAL — "ஹவுஸ்புல்"
DAILY 5 SHOWS
— புரூஸ்லியின் சாகஸம்.
FIST OF FURY
—"புரூஸ்லி கொலைகாரன் ஆகியதன் மர்மம் என்ன?
அவனுல் கொலை செய்யப்பட்டவர் ஆயிரக்கணக்கில்...


# இன்றைய பலன்

ஆவணி மாதம் 29-ம் திகதி
திங்கட்கிழமை
(14 - 9 - 81)

மேடம்- முதலீட்டுச் செய்யும் தொழிலில் அதிக இலாபத்தைத் தரலாம். கல்வித் துறையில் அதிக முன்னேற்றம் காணப்படுகின்றது. பிள்ளைகளின் படிப்புக்காகப் பணம் செலவாகலாம் விருந்து வைபவத்திற்கு இடமுண்டு.

இடபம்- உறவு முறையினில் வெடிப்பு ஏற்படும் பண விவகாரத்தின்மூலம் பகை தோன்றலாம், தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

மிதுனம்- கொள்கையில் கோளாறால் நல்ல சந்தர்ப்பத்தைத் தேடித் தரலாம் பிள்ளைகளின் பிணி கவலையைக் கொடுக்கும் அமைதியுடன் செயலாற்றவும்.

கடகம்- போதுமென்ற மனமும் புண்ணிய விருப்பும் மேவிடும் பொருள் வரவும் நல்ல தினம் சஞ்சலமான செய்தி கிடைக்கும் தற்பெருமையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

சிங்கம்- புதிய துறைகளில் ஈடுபடுவீர்கள் வியாபாரிகளுக்கு நல்ல முன்னேற்றமுண்டு. புதிய முதலீடுகளுக்கு சிறப்பான தினம்.

கன்னி- பந்தபாசம் உங்களை பரவசப்படுத்தும் உறவினர்கள் உற்சாகமான வரவேற்பைக் கொடுப்பார்கள் கல்வித் துறையில் அதிக ஈடுபாடு ஏற்படும்.

துலாம்- கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும் இலட்சிய நோக்குடன் காரியமாற்றுவீர்கள் இனசனக் கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு பிள்ளைகளின் செல்வாக்கு வளரும்.

விருட்சிகம்- ஆயுதபீடைக்கு இடமுண்டு அவசரப் போக்கைத் தவிர்க்கவும் தவறான பாதையைக் காட்டுவதற்கு எதிரிகள் காத்திருப்பர். இறை நம்பிக்கையும் மனத்திடமும் வேண்டும்.

தனு- கண்ணியமான காரியங்களை முடிப்பதில் வெற்றி காண்பீர்கள் சுற்றுடலில் செல்வாக்கு வளர்ச்சியடையும். காதல் சிட்டுக்களுக்கு இன்று தேன்சொட்டு தினம்.

மகரம்- எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும் நண்பர்கள் மூலம் நஷ்டமடைவதற்கு இடமுண்டு. கூட்டு வியாபாரத்தில் மோசடி நடக்கலாம் நன்றாகச் சிந்தித்துச் செயலாற்றவும்.

கும்பம்- கனவுபோல் வாழ்வு இன்று மலரும் கடமையாற்றுமிடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். சிலருக்குப் பதவி உயர்வுக்கும் இடமுண்டு.

மீனம்- வியாபாரத் துறையில் துரித முன்னேற்றம் புதிய துறைகளில் கனம் நாடுதல் பலன்தரும் பிரயாணம் நண்பர்களின் ஆதரவு இன்றுடன் தெய்வத்தின் துணை. சுபதினம்.

சோதிட கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## ஆலய நிர்வாகிகள்

[புலோலி]

புலோலி கிழக்கு குருமணல் கந்தசாமி ஆலய வருடாந்த பொதுக்கூட்டம் கோவில் முன்றலில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர், தலைவர் க. செல்லையா, உப தலைவர் பொ. பத்மநாதன், செயலாளர் இ. சிவலிங்கம், உப செயலாளர் சி. இராமச்சந்திரன், பொருளாளர் சி. இருள்ணர், உப பொருளாளர் பொ. சிங்காரம்.

செயற்குழு உறுப்பினர்கள் இ. சுந்தரலிங்கம், க. ராஜா, க. செல்லத்துரை, க. தம்பிராசா, மு. இராசசேகரம். (அ)

# வடக்கின் 11 தொகுதிகளிலும் தொழிற்பயிற்சி நிலையங்கள்

(கண்டிக்குளி)

நாட்டில் எங்கும் பரவலாக ஏற்பட்டிருக்கும் தொழில் நுட்பத் தொழிலாளர் பற்றாக் குறையை நீக்குமுகமாக அரசாங்கம் ஒவ்வொரு பாராளுமன்றத் தொகுதியிலும் தொழில் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்துள்ளது.

யாழ். மாவட்ட அமைச்சின் கீழ் இதுவரை 11 பயிற்சி நிலையங்களைத் தொழில்பகுதியினர் ஆரம்பித்துள்ளனர்.

சமீபத்தில் கோப்பாயில் சிறுப்பிட்டி என்ற இடத்திலும் யாழ்ப்பாணத்தில் சுண்டுக்குளியிலும், மானிப்பாயில் ஆனைக்கோட்டையிலும் தையல் பயிற்சிநிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உடுப்பிட்டியிலும், நெடுந்தீவிலும் மேசன் பயிற்சி நிலையங்களும், நல்லூரில் ஒரு தச்சுத் தொழில்ப்பயிற்சி நிலையமும் ஆரம்பிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் சுமார் 20பேர் தொழில் கல்விபெறுகின்றார்கள். சுமார் 9 மாத காலத்துக்குப் பயிற்சி பெறும் இவர்களுக்கு பயிற்சிக்குரிய உபகரணங்களும் நாளாந்தம் 5 ரூபா வேதனமும் வழங்கப்படுகிறது.

பயிற்சி முடிவில் சித்தி எய்தியவர்களுக்குத் தொழில் துறை ஆணையாளரால் நற்சாட்சிப் பத்திரம் வழங்கப்படும். இப்பயிற்சியாளர்களுக்கு அரசாங்க தொழில்த் துறை நியமனங்களில் முன்னுரிமை வழங்கப்படும்.

# "எலிசபெத் பேக்கர் அம்மையார் வடக்கு, கிழக்கிற்கு ஆற்றிய பணிகள் மகத்தானவை"

## - யாழ். அரசஅதிபர்

(அரியாலை)

"இறை பணியை மேற்கொள்ள இலங்கைக்கு வந்த அம்மையார் இறைபணியுடன் சமூகப் பணியையும் திறம்படச் செய்துவருகிறார். இறை பக்தியுடன் இவர் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஆற்றிய சேவைகள் மகத்தானவையாகும்" என்று யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா பரந்தன் நவஜீவன இளைஞர் மண்டபத்தில் நடைபெற்ற சகோதரி எலிசபெத் பேக்கர் அம்மையாரின் பொன் விழா பொதுசன வரவேற்பு வைபவத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்,

முரசுமோட்டை கிராம சேவை அலுவலர் திரு. எஸ். வி. இராசையா கவிதை மூலம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார், யாழ் கத்தோலிக்க திருமறை மாவட்டத்தின் பேராயர் சார்பில் கிளிநொச்சிப்பகுதிக் குருப்பிரசாதி கலந்துகொண்டுபேசினார் அருட்திரு. ஏ. வி. யேசுதாசன் அடிகளார் வாழ்த்துரை வழங்கினார்.

நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம் பேசுகையில் சகோதரி சேவையின் மூலம் இறைவனின் சாயலாக விளங்கினாரென்றும் மக்கள் சேவையை இறைவனின் திருப்பணியென்ற மனவுணர்வுடன் செய்துவருகின்றார் என்றும் குறிப்பிட்டார்.

தென்னிந்திய திருச்சபையின் யாழ் திருமறைமாவட்டத்தின் முன்னாள் பேராயர் பேரருட் திரு. சுலேந்திரன் ஆண்டகையும் இன்னும் பலரும் அம்மையாரின் சேவைகள் குறித்துப் பேசினார்கள்.

நவஜீவனம் பிள்ளைகளின் கதம்ப நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நவஜீவன அதிபர் அருட்திரு ஏ. சி. தம்பிராசா அடிகளார் நன்றி தெரிவித்துப் பேசினார். (அ)

### திரைப்படக் கூட்டுஸ்தாபனத்தின்

# திரைக்கதைப் போட்டியில் பரிசு முடிவுகள்

(கொழும்பு)

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் நடத்திய தமிழ்த்திரைப்படக் கதை எழுதும் பிரதிப்போட்டியில் முதல் பரிசை, திரு. பி. விக்னேஸ்வரனும் இரண்டாம் பரிசை திரு. கே. சார்த்திகேசுவும் மூன்றாம் பரிசை திரு கே. கே. மதிவதனமும் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் நாளை மறுதினம் தேசியதிரைப்படக் கூட்டுத்தாபன மண்டபத்தில் கூட்டுத்தாபனத் தலைவர் திரு அனுரா விக்கிரமசிங்காவினால் வழங்கப்படும்.

இப்போட்டிக்கு ஐம்பத்தேழு கதைப்பிரதிகள் அனுப்பப்பட்டிருந்ததாகவும் அவற்றுள் பெரும்பான்மையானவை தரமாயிருந்ததாகவும் மதிப்பீட்டுக் குழு தெரிவித்துள்ளது. முதலாவது இடத்தைப்பெற்ற 'கிராமத்து இதயம்' என்ற திரைப்படக் கதைப் பிரதிக்கு, ஐயாயிரம் ரூபாவும், இரண்டாவது இடத்தைப்பெற்ற 'சுட்டும் சுடர்கள்' கதைப் பிரதிக்கு நாலாயிரம் ரூபாயும், மூன்றாவது இடத்தைப்பெற்ற 'இற கொடிந்த பறவைகள்' என்ற திரைக்கதைக்கு மூவாயிரமும் வழங்கப்படும். (அ)

## அடுத்த...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் கட்சி உறுப்பினரான ஜஹுப் காசிம் ஒப்பந்தப்படி இராஜினாமா செய்வாரென்றும் அவரது இடத்துக்குப் பாலஷுயூரைச் சேர்ந்த திரு. செ.ப [illegible]பிள்ளை என்பவர் மாநகர உறுப்பினராக நியமனம் செய்யப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## உற்பத்திகளுக்கு ஊக்குவிப்பு

(சக்கோட்டப்பள்ளி)

பனம்பொருள் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில் அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் மூலம் பனம் பொருள் உற்பத்திப் பொருட்களை பனம்பொருள் அபிவிருத்தி சபை கொள்வனவு செய்யவுள்ளது.

தனியார் தமது காணிகளிலுள்ள

# பனைகள் தறிப்பதற்கு அரச அனுமதி பெறவேண்டும்!

## அரசஅதிபர்களுக்கு ப. பொ. அ. சபை வேண்டுகோள்

[புலோலி]

பனைவள அபிவிருத்திகளைத் துரிதமாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளைப் பனம்பொருள் அபிவிருத்தி சபை மேற்கொண்டுவருகின்றது. அத்தோடு பனைமரங்கள் அநாவசியமாக அழிக்கப்பட்டு வருவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் சபை மேற்கொண்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து பனம்பொருள் அபிவிருத்தி சபை பனைமரங்கள் வீணாக அழிக்கப்பட்டுவருவதைத் தடைசெய்யும்படியும், தனியார் தமது காணிகளிலுள்ள பனைமரங்களை வெட்டுவதற்கு அரசாங்க அதிபரின் அனுமதியைப்பெற வேண்டுமென்றும் சுற்றுநிருபம் மூலம் சகல அரசாங்க அதிபர்களையும் கேட்டுள்ளது.

பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள செம்பியன்பற்று என்னுமிடத்தில் 500 ஏக்கரில் பனைமரங்களை நாட்டுவதற்கும் அங்கு பனைவள ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

# பாதைசீர்கேடு: பஸ்சேவை இடைநிறுத்தம்!

[கிளிநொச்சி]

பாதை சீர்கேட்டால் பஸ் சேவை இடை நிறுத்தப்பட்டது.

கிளிநொச்சியிலிருந்தும், குறிகாட்டுவானிலிருந்தும் உருத்திரபுரம், சிவநகர் ஆகிய இடங்களுக்கு இதுவரை நடைபெற்று வந்த பஸ் சேவை 8 ம் வாய்க்காலில் இருந்து உருத்திரபுரம் வரையுள்ள பாதை குன்றும் குழியுமாக வாகனம் ஓட முடியாத நிலையில் இருப்பதால் மேற்படி பஸ் சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இப்பஸ் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளதால் பாடசாலைப் பிள்ளைகளும், பொது மக்களும் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலின்போதும் பாதை சீர்கேடு காரணமாக இந்த பஸ் சேவை 8 ம் வாய்க்காலுடன் இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்தது.

கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி தலைமையில் சென்ற தூதுக்கோஷ்டி கிளிநொச்சிச் சாலை அத்தியட்சகர் திரு. சொக்கலிங்கத்தைச் சந்தித்து 3 மாத காலத்திற்குள் பாதையைச் செப்பனிட்டுத் தருவதாகவும், அதுவரை சிரமம் பாராது பஸ் சேவையைத் தொடர்ந்து நடத்துமாறும் கோரியதைத் தொடர்ந்து பஸ் சேவை ஆகஸ்ட் மாத இறுதி வரை தொடர்ந்தும் நடத்தப்பட்டது. ஆனால் மாத இறுதியுடன் பஸ் சேவை நிறுத்தப்பட்டது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் இதுவரை திறைசேரியில் இருந்து தொகுதிக்கு அனுப்பப்படாததனால் உருத்திரபுரம் பாதை திருத்தியமைக்கப்படவில்லை என்றும் நிதி கிடைக்கப் பெற்றதும் பாதை சீர் திருத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. [சொ]

### மகாதேவா....

[3ம் பக்கத் தொடர்ச்சி]

அதிபர்கள் ஊடாகவும் லொறிச் சொந்தக்காரர்களைச் சந்திக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு சகல லொறிச்சொந்தக்காரர்களும் உதவி புரிந்தால் இத்திட்டம் வெற்றிபெறும். இதற்குச் சகலரும் ஒத்துழைக்க வேண்டும் பொது மக்களும், நிர்வாகிகளும் உற்சாகமளிக்கவேண்டும்.

இப்பணியில் கூட்டுறவு இயக்கமும் அது சார்ந்த நிறுவனங்களான ப நோ. கூ. சங்கங்கள், தெங்குபனம்பொருள்உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் சங்கங்கள் லொறிகளை இலவசமாக விடச் சம்மதித்துள்ளதுடன் லொறி இல்லாத சங்கங்கள் அதற்குரிய பணத்தை "யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்" பெயருக்கு காசோலையாக அனுப்பி வைத்துள்ளனர். சிரமதானக்கமிட்டி லொறி போக்குவரத்தை இப்பணத்தின்மூலம் ஒழுங்கு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு லொறி விடமுடியாத பொது மக்களும் உதவி புரிய முடியும். அவர்கள் அளிக்கும் நன்கொடைகள்மூலம் லொறிப் போக்குவரத்து செய்யப்படவுள்ளது.

இந்நிலையில் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எமது பொதுமக்களும், லொறிச்சொந்தக்காரர்களும், கூட்டுறவுஇயக்கங்களும் அனைத்து சமூக நிறுவனங்களும் பங்குபற்றி இத்திட்டத்தினை நிறைவேற்றப் பாடுபட வேண்டுமென்பதே யாழ் மாவட்ட அபிவிருத்தியில் நாட்டமுடைய அனைவரதும் விருப்பமாகும்.


சிவபாலன் சைக்கிள் ஸ்ரோர்ஸ்
75, மானிப்பாய் வீதி - யாழ்ப்பாணம்

இன்று ஆரம்ப விழா

வன்செயலால் பாதிக்கப்பட்ட எமது ஸ்தாபனத்தை இறைவன் திருவருளால் பழைய இடத்திலேயே புதிதாகக் கட்டிடம் அமைத்து இன்று (14-9-81) திங்கட்கிழமை இரவு 9 மணிமுதல் 9-30 மணிவரையுள்ள சுபநேரத்தில் தொடங்க இருப்பதால் அன்பர்களும், ஆதரவாளர்களும் சமுகந்தந்து, மென்மேலும் ஆதரவுதந்து ஊக்குவிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நல்வரவை விரும்பும்
எம். எஸ். அப்பையா

[0911]


## இப்படியும் நடக்கிறது

சீனாவிலுள்ள நாங்கிங் எனுமிடத்தில் இப்படியும் ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கிறது!

நாற்பத்து இரண்டு நாள் வயதுடைய ஒரு ஆண் குழந்தைக்கு மெல்ல மெல்ல வயிறு ஊதிவிட்டது. கடைசியில் காய்ச்சலும் வரவே, குழந்தையின் பெற்றோர் ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

குழந்தையின் வயிற்றில் டாக்டர்கள் சத்திர சிகிச்சை மேற்கொண்டபோது; குழந்தையின் வயிற்றுக்குள் வளர்ச்சி நிலை அடையாத இரட்டைச் "சிசு"க்கள் காணப்பட்டன. இந்த "சிசு"க்களில் வெறும் தோலும், தலைமயிரும், குடல்களுமே காணப்பட்டன!

இதில் என்ன அதிசயம் என்றால் சத்திர சிகிச்சைக்குள்ளான குழந்தை இப்பொழுது சுகமடைந்து வருகிறது!

ஊடுருவி.

### யாழ் நகரிலுள்ள உல்லாச விடுதி மூடப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரிலுள்ள பிரபல உல்லாசவிடுதியொன்று விரைவில் மூடப்படவுள்ளது,

நீண்டகாலமாக, வெளிநாட்டு உள்நாட்டு உல்லாசப் பயணிகளுக்கு, சிறப்பான சேவையாற்றிவந்த இவ்விடுதி, நிர்வாக கஷ்டம் காரணமாக மூடப்படுவதாகத் தெரிய வருகிறது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள இவ்விடுதி, சுமார் எட்டு வருடங்களாக இயங்கிவந்தது குறிப்பிடத்தக்கது.

[பச்சிலைப்பள்ளி]

பளை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பலகாலமாக மாவட்ட வைத்தியஅதிகாரி இல்லாத குறை நீங்கியது.

இவ் வைத்தியசாலையில் டாக்டர் சிவபாலன் மாவட்ட வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் அக்கராயன்குளம் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றியவராவார். [அ]

வடமாநிலத்தில்

# தனியார் சேவையில் 250 பஸ்கள்!

## பத்துநிமிடத்துக்குஒருபஸ்!!

(நமது சுண்டிக்குளி நிருபர்)

[சுண்டிக்குளி]

வசதியான பயணத்தையும், துரிதமான சேவையையும் பிரயாணிகளுக்கு அளித்து, பொதுமக்களின் நன்மதிப்பையும் அரசாங்கத்தின் பாராட்டையும் தனியார் பஸ்சேவை பெற்று எதிர்பாராத முன்னேற்றம் கண்டுள்ளதாக வடமாநில தனியார்வாகனசேவை சங்கத் தலைவர் திரு. ஏ. பி. ஏ. வால் தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை பற்றி நமது நிருபர் மேற்படி சங்கத் தலைவரிடம் கருத்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

"சுமார் ஒருவருட காலத்துக்குள் எமது முன்னேற்றத்தையும் சேவையையும் பல பொதுமேடைகளில் பாராட்டிவரும் போக்குவரத்து அமைச்சர் எமக்கு பலவிதமான வரிச் சலுகைகளையும் அளித்துள்ளது வரவேற்கத் தக்கது" என்று கூறிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இலங்கை போக்குவரத்துச் சபையினருக்கு இருக்கும் பஸ் நிலைய வசதிகளும் வீதிகளில் உடனுக்குடன் வாகனங்களை பழுதுபார்க்கும் வசதிகளும், பொலிஸ் உதவிகளும் எமக்கு இல்லை எமது சேவை ஆரம்ப காலத்தில் இலங்கை போக்குவரத்து சபையினரதும், பொலிசாரினதும் கெடுபிடிகள் காரணமாக சேவையாற்றமுடியாமல் எமது பஸ் வண்டிகள் யாழ். முற்றவெளி மைதானத்தில் ஒருநாள் வேலைநிறுத்தம் கூட செய்யவேண்டியிருந்தது.

"எமது சங்கம் பொலிஸ் தலைமைப்பீடத்துடன் மட்டுமின்றி யாழ். மேயர், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி நல்ல சேவை அளித்து வருகிறது.

"இதுவரை சுமார் 250 பஸ் வண்டிகள் எமது கட்டுப்பாட்டுக்கு அமைய சகலபாதைகளிலும் பத்து நிமிடத்துக்கு ஒரு பஸ் வீதம் பிரயாணிகளுக்கு சேவையாற்றிவருகிறது. வழியில் பழுதடைந்து நிற்கும் இ. போ. ச. பஸ்ஸின் பிரயாணிகளைக்கூட சில சமயங்களில் எமது பஸ் வண்டிகள் தான் கொண்டு செல்கின்றன எமது பஸ் ஊழியர்களுக்கு அவர்களின் தினசரிச் செலவு போக காப்பாளர்கள் சுமார் 30 ரூபா வரையும், சாரதிகள் சுமார் 40 அல்லது 45 ரூபா வரையும் தினமும் சம்பளமாகப் பெறுவதனால் மனநிறைவுடன் அவர்கள் வேலை செய்கின்றார்கள். எமது பஸ் வண்டிகள் சில இன்னும் பாதை ('றூட்') இலக்கம் இல்லாமல் இருக்கின்றன; அவற்றைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளில் சங்கம் இறங்கியுள்ளது" எனவும் அவர் தெரிவித்தார்.

### வெளிநாட்டு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சாலையைப் பொறுப்பேற்று நடத்துவது,

"வவனியா தச்சுப் பாடசாலையைப் பொறுப்பேற்று நடத்துவது,

"மரம் அரியும் ஆலை, தச்சுத் தொழிலகம், இரும்புத் தொழிலகம், இயந்திரத்துடன் கூடிய செங்கல் தொழிற்சாலை போன்றவைகளை உள்ளடக்கிய வேலைத் தளம் ஒன்றினை பொறியியலாளரின் தலைமையின் கீழ் உருவாக்குவது,

"வவனியா நகராட்சிக்கு உட்பட்ட தோணிக்கல்லிற்கு அருகில் 10 ஏக்கர் நிலத்தைச் சுவீகரித்து அதில் ஒரு தொழில் பேட்டையைஉருவாக்குவது."

### திருட்டு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இக்களவு சம்பந்தமாக ஏழாலையைச் சேர்ந்த கே. சுந்தரலிங்கம் என்பவர் கிளிநொச்சியில் வைத்துக் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

இவர் விற்ற 7 தங்கப்பவுண் தாலிக்கொடி, யாழ்ப்பாணம் நகைக் கடையொன்றில் உருக்கிய நிலையில் மீட்கப்பட்டது. தாலிக்கொடியை விற்பனை செய்த பணத்தைக்கொண்டு, இவர் தனக்கு மோதிரமும், மனைவிக்கு இரு ஜிப்சியும், பெறுமதியான உடுபிடவைகளும் வாங்கியதாகவும், யாழ்ப்பாணத்திலுள்ள ஒருஹோட்டலில் உல்லாசமாகப் பொழுது போக்கியதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

[மா]

### தமிழ் அகதி,.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வருகின்றன.

இந்த முகாமில் சுமார் 400 பேர் உள்ளனர். தொடர்ந்து பலர் முகாமுக்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

கடந்த வாரம் ஒரு குறிப்பிட்ட தினம் இம்முகாமுக்கு திடீர் விஜயம் செய்த இந்தியத் தூதரக உயர் அதிகாரி ஒருவர், அன்று மாலை ஆறு மணிக்குப்பின்னர் இம்முகாமுக்கு வருவோர் இந்தியா திரும்புவதற்கு அனுமதிக்கப் படமாட்டார்கள் என்றும் அவ்விதம் புதிதாக அனுமதிக்கப் படுவோருக்கு இந்திய பாஸ்போர்ட் [கடவுச் சீட்டு] வழங்கப்படமாட்டாது என்றும் கூறிச்சென்றாராம்.

இதனைத்தொடர்ந்து இலங்கை குடியகல்வு குடிவரவு திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி இம்முகாமுக்கு விஜயம் செய்து புதிதாக இனிமேல் எவரும் அனுமதிக்கக் கூடாது என்ற தோரணையில் புதிதாக வருவோருக்கு இந்தியா செல்ல டிக்கட் வழங்கப்படமாட்டாது என்று தெரிவித்திருந்தாராம்.

அதே தினத்தில் இம்முகாமுக்கு வந்த தொழிற்சங்கவாதி ஒருவர் முகாமிலிருந்து வெளியேற விரும்புவோருக்கு 350 ரூபா வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தாராம்.

இத்தொடர் நிகழ்ச்சிகளை அவதானித்த முகாம் பொறுப்பாளர்கள் இம்முகாமை சில தினங்களில் மூடிவிட அரசு எண்ணம் கொண்டிருப்பதையே மேற்படி நிகழ்ச்சிகள் பிரதிபலிப்பதாக கவலை தெரிவித்துள்ளனர்,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 603ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் 14-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper at the General Post office: Sri Lanka. Regd. Q. P: 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.